முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

AS 7/2025 in I.A.8/2026

A.லூயி பிராங் ஆண்டனிராஜ், வழக்கறிஞர்/ ஆணையர் என்பவரின் வாக்குமூலம் Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திரு. திருமதி.G.ரேவதி, பெஞ்ச் கிளார்க் கிரேடு -1 என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | A.லூயி பிராங் ஆண்டனிராஜ், | வயது | : | 70 |
| தந்தை பெயர் | : | ஆரோக்கியசாமி | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | வழக்கறிஞர் |

நாள் :13.03.2026

CW 1

முதல் விசாரணை

1) நான் தற்போது தஞ்சாவூர் வழக்கறிஞராக பணி செய்துகொண்டிருக்கிறேன்.

2) நான் தஞ்சாவூர் முதன்மை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.106/92 வழக்கில் இறுதி தீர்ப்பாணை பிறப்பிக்ககோரும் மனு எண்.98/2022 ல் ஏற்பட்ட உத்தரவின் படி வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டேன்.

3) என்னிடம் காட்டப்படும் அறிக்கையை நான் தயார் செய்து 10.6.2023 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். மேற்படி அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பு இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தரப்பினர்களுக்கும் பதிவு தபால் மூலம் அறிவிப்பு அனுப்பி பல்வேறு தேதிகளில் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் முன்னிலையில் அளவீடு செய்து அவர்கள் தாக்கல் செய்த அறிக்கை வரைபடம், மற்றும் வருவாய் ஆவணங்கள் அடிப்படையில் என்

அறிக்கையை தாக்கல் செய்தேன். அந்த அறிக்கை இதுதான். அது **நீ.ம.சா.ஆ.1** ஆகும்.

**( மேல்முறையீட்டாளர் தரப்பில் மேற்படி நீ.ம.சா.ஆ.1 ஆவணத்திற்கு ஆட்சபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டது.) மேற்படி ஆட்சேபணையின் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**மேல் முறையீட்டாளர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தஞ்சாவூர், பாபநாசம் வட்டம் குளிச்சப்பட்டில் உள்ள சொத்துக்கள் A அட்டவணையும் மருங்கையில் உள்ள சொத்துக்கள் B அட்டவணையும், கத்தரிநத்தத்தில் உள்ள சொத்துக்கள் C அட்டவணையும் என என்னுடைய அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) இந்த மூன்று சொத்துக்களும் தரத்திலும், வகைபாட்டிலும் சரிசமமான நிலையில் உள்ள தரத்திலும் வகைப்பாட்டிலும் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். மதிப்பீடு மாறும் என்றால் சரிதான்.

3) நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் C அட்டவணையில் கண்ட புல எண்.301/2 என்பது ஒரு ஏக்கர் 45 செண்ட் விஸ்தீர்ணத்தில் உள்ளது. அது தற்போது 9 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

4) நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் மேற்படி புல எண்ணின் ஒவ்வொரு பங்குதாரர்களுக்கும் தலா 29 செண்ட் ஒதுக்கியிருக்கிறேன் என்றால் சரிதான்.

5) C அட்டவணை சம்பந்தமான வரைபடத்திலும் வாதிக்கு புல எண்.301/2 A ல் 17- ½ செண்டும் 301/2B ல் 11- ½ செண்ட் என்றும் ஆக கூடுதல் 29 செண்ட் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அறிக்கையில் அவ்வாறு கூறியுள்ளேன். வரைபடத்தில் 301/2B என்பது தவறுதலாக 11- ½ ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இடத்தில் செண்ட் என்ற வார்த்தைதான் எழுதி இருக்கவேண்டும் . தவறுதலாக ஏர்ஸ் என்று எழுதிவிட்டேன்.

6) நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் 4 வது பக்கத்தில் புல எண்.301/2 A யில் 17 – ½ ஏர்ஸ் பரிமளாகாந்தி என்றும் 301/2B யில் 17 – ½ ஏர்ஸ் விமலாதேவி பெயரிலும் உள்ளதாக வருவாய் பதிவேடுகளில் உள்ளன என்பதை குறிப்பிட்டுள்ளேன். இந்த 17 – ½ ஏர்ஸ் என்பது 43 செண்ட்க்கு சமம் என்றால் சரிதான்.

7) வாதிக்கு 29 செண்ட் ஒதுக்கியது 301/2 A யில் ஒரு பகுதியை கொடுத்தால் போதுமானது என்றால் தவறு. ஏன் என்றால் வருவாய் துறை ஆவணங்களில்தான் 43 செண்ட்

இருப்பதாக உள்ளது. ஆனால் பூமியியை அளந்து பார்க்கும்போது 43 செண்ட் இல்லை. 17- ½ செண்ட்தான் இருக்கிறது. அதனால் 11- ½ செண்ட்டை 301 /2B யில் கொடுத்தேன்.

8) இந்த விபரத்தை அறிக்கையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் நேரடியாக நிலத்தை சர்வேயர் மூலம் அளவீடு செய்தபோது 17 – ½ செண்ட் இருந்ததை பார்த்ததால் அந்த விபரத்தை மட்டும் என் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

9) ஒருவேளை அங்கு ஒரு ஏக்கர் 45 செண்ட் இல்லை என்றால் பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட 29 செண்ட் நிலத்தில் அளவு குறைவுதானே என்றால் நான் நேரடியாக சென்று அளந்து பார்த்தபோது பூஸ்துதியில் ஒரு ஏக்கர் 45 செண்ட் இருந்ததால் 5 பேருக்கும் தலா 29 செண்ட் என்று ஒதுக்கீடு செய்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

10) நான் இதுபோன்று பூஸ்துதியில் 301/2A யில் 43 செண்ட்க்கு பதிலாக 17 – ½ செண்ட் தான் சர்வேயர் மூலம் அளந்து பார்த்தபோது இருந்ததாக தவறாக சொல்கிறேன் என்றும் அங்கு உண்மையிலேயே 43 செண்ட் இருக்கிறது என்றும் சொன்னால் தவறு.

11) சர்வே எண். 301 /2B யில் மொத்தமாக எவ்வளவு இருக்கிறது என்பதை நான் சர்வேயர் உதவியுடன் அளக்கவில்லை. 29 செண்ட் கொடுக்கவேண்டும் என்பதற்காக 11 - ½ செண்ட்டை மட்டும் அளந்து அந்த பங்குதாரருக்கு கொடுத்தேன்.

12) வரைபடத்தில் கண்டுள்ள புல எண்.301/2B யில் 11 – ½ ஏர்ஸ் என்று குறிப்பிட்டுள்ளது வாதிக்குரிய 29 செண்ட்க்கு சமமா என்றால் தவறு.

13) புல எண்.301/2A யில் மொத்தமாக 29 செண்ட் இல்லை என்பதால்தான் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக புல எண்.301/2B யில் 11 – ½ செண்ட் கொடுத்தேன்.

14) A அட்டவணையில் உள்ள மொத்தம் 5 ஏக்கர் 56 செண்ட்டில் தலா ஒரு நபருக்கு 1 ஏக்கர் 11 செண்ட் கொடுக்கலாம் என முடிவு செய்து 1 வாதிக்கு ஒரு ஏக்கர் 11 செண்ட் கொடுத்திருக்கிறேன் என்று என் அறிக்கையில் பக்கம் 6 ல் 3 வது பாராவில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வரைபடத்தில் ஒரு ஏக்கர் 31 செண்ட் என காட்டியிருக்கிறேன் என்றால் எனது அறிக்கையில் 1 ஏக்கர் 11 செண்ட் என்று சரியாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் வரைபடத்தில் ஒரு ஏக்கர் 31 செண்ட் என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன்.

15) கத்தரிநத்தத்தில் உள்ள C அட்டவணையில் சொத்துக்கள் அனைத்தும் மனையாக மாறியுள்ளது என்றால் நான் அளக்கும்போது மனையாக இல்லை. ஆனால் அந்த மனையில் 29 செண்ட் போக மீதி இடங்கள் காலியாகவும் ஒரு சமாதியும் நிறைய வீடுகளும் உள்ளன.

16) அறிக்கை பத்தி 6 ல் 2 வது வரியில் C அட்டவணையில் வீட்டு மனை என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த கருத்துக்கு மாறாக தற்போது அங்கு மனைகளே பிரிக்கப்படவில்லை என்ற தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

17) நான் சரியாக அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முறையான அளவீடுகளை என் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

**1 ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) புல எண்.301/2 என்பது எனக்கு வழுங்கப்பட்ட நீதிமன்ற வாரண்ட்டில் ஒரு ஏக்கர் 45 செண்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களில் ஒரு ஏக்கர் 45 செண்ட் என்பது பரிமளாகாந்தி, பங்கஜவள்ளி, விமலாதேவி, செந்தில்குமாரி ஆகியோர்கள் பெயர்களில் மட்டும் இருக்கிறது என்பது தவறு. வேறு சில பேர்களும் இருக்கிறது .அந்த விபரத்தை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அங்கு உண்மையில் ஒரு ஏக்கர் 45 செண்ட் நிலத்தை தவிர வேறு கூடுதலான அளவுள்ள பூமி அங்கு இருக்கிறது என்றால் தவறு.

2) அங்குள்ள சமாதி இருதரப்பினருக்கும் பொதுவானது என்றால் சரிதான். அவ்வாறுதான் என் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன்.

**2 ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் அறிக்கையில் புல எண்.301/2 ல் அடங்கிய ஒரு ஏக்கர் 45 செண்ட்டில் ஒவ்வொரு பங்குதாரர்களுக்கும் தலா 29 செண்ட் ஒதுக்கவேண்டும் என்று எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு மேல் கொடுக்க நான் பரிந்துரைக்க வில்லை என்றால் சரிதான். அதற்கு மேல் கொடுக்கமுடியாது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.13 19:02:44 +0530